# பதிவேடுகள் பேணப்படுவதன் அவசியம் என்ன?

பரந்துபட்ட பொதுமக்கள் வட்டத்தின் பதப் பிரயோகத்துள் பெரும்பாலும் இல்லாததும், ஆயினும் தனித்துவமான முக்கியமான செயற்பாடுகளையும் நோக்கங்களையும் கொண்டதுமான இச்சுவடிகளும் சுவடிகள் திணைக்களமும். சுவடிகள் என்ற பதமானது காலத்தையும் பெறுமானத்தையும் தனக்குள் கொண்டது.

இது பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் என்ற பதங்களிலிருந்து வேறுபடுகிறது - இங்கு சுவடிகள் என்பதின் மூலம் விளக்கப்படுவது, அது பதிவேடாகவோ ஆவணமாகவோ இருக்கலாம் அவை நடைமுறை பாவனையிலிருந்து நின்றவையாகவோ அல்லது விசேட தேவைகளுக்காக மட்டும் நடைமுறையில் தருவிக்கப்படுபவையாகவோ இருப்பதுடன் அந்நிறுவனத்திற்கான முக்கியமான விபரங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதுடன் அவை பேணுகையில் வைக்கப்படுவதும், பேணப்படுவதினால் அதன் பெறுமதியை உணர்த்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

சுவடிகள் நிறுவனங்கள் புராதன கிரேக்க நாகரிகங்களுடன் தோற்றம் பெற்றது எனலாம். கி. மு. 5, 4 ஆம் நூற்றாண்டுகளில் ஏதேன்ஸ் மக்கள் மிக முக்கியமான ஆவணங்களை கோயில்களில் இறைத்தாயிடம் வைத்து பாதுகாத்தார்கள் என்பதுடன் கையெழுத்துப்பிரதிகளும் ஆவணங்களும் பைப்பிரஸ் சுருள்களாகவும் பேணப்பட்டது. மேலும் இலக்கியங்களையும் அரசு வளர்ச்சிகளையும் மக்கள் வரலாறுகளையும் அறியக்கூடியதாக இருக்கிறதெனில் அதற்கான காரணம் அப் பேணுகையின் அவசியம் அங்கே காணப்பட்டிருக்கிறது என்பதே.

என்ன காரணத்திற்காக பதிவேடுகளை பேணவேண்டும் என்பது முக்கியமானதாகிறது. அரச முக்கியத்துவத்தினை நடைமுறைத் தேவையில் அபிவிருத்தி செய்தல், இரண்டாவதாக கலாசார முக்கியத்துவத்திற்காக கலாசார மூலங்களில் ஒன்றானது இச் சுவடிகள். இவை புத்தகங்கள், கையெழுத்துப்பிரதிகள், அரிய பொக்கிஷங்களாக இருக்கலாம். பொது மக்களின் சொத்தாக ஆவணங்களாக கருதப்படுகிறது.

மூன்றாவதாக இவை தனிப்பட்ட இப்பதிவேடுகளில் எவ்வாறு கூறப்படுகிறது என்பதனை அறிய முடியும். நான்காவது காரணம் அலுவலக ரீதியானது. பழைய பதிவேடுகள் கூட அரச செயற்பாட்டிற்கு ஆதாரமாக இருக்கிறது. ஓர் அரசின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்துவதுடன் நடவடிக்கைகளின் தகவலைத்தரும் மூலங்களாக செயற்படுகின்றன.

திணைக்களத்தின் நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிக்கூடச் சட்டத்தினாலும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினாலும் அச்சக் கட்டளைச்சட்டம் (அத்தி 179) செய்தித்தாள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றினாலும் நிருவகிக்கப்படுவதாகும்.

**(கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் தேசிய சுவடிகள் திணைக்களம் சுவடிகள் வாரத்தை கொண்டாடுகிறது)**

மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் விசேட ஜனாதிபதிக்குழுவின் பதிவேடுகளை உள்ளடக்குவதற்காக 1973 ஆம் ஆண்டின், 48 ஆம் இலக்க தேசிய சுவடிக் கூடச் சட்டத்தின் பகுதி 2 இல் சில மாற்றங்கள் சட்டவரைஞர் திணைக்களத்தினால் கொண்டுவரப்பட்டது. அதோடு தனியார் நிறுவனங்களின் கேட்டல் காண்டல் பதிவேடுகளையும் சேர்ப்பதற்கு வேண்டிய விதிகளின் இறுதிவரைவும் தயாரிக்கப்பட்டது.

அரசுப் பதிவேடுகளை நிரந்தரமாய் பாதுகாத்து வைத்ததற்காக சேர்த்துக் கொள்ளல், அவற்றின் பேணுகை, ஆராய்ச்சியும் வெளியீடும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பதிவேடுகளை கிடைக்குமாறு செய்தல், நாட்டில் சகல அச்சிடப்பட்ட விடயங்களுக்குமான பிரதான சட்டரீதியான வைப்பகமாக சேவையாற்றுதல், தனியார் வசமுள்ள சாதனங்களின் அளவைகளை மேற்கொள்ளல் என்பன இத் திணைக்களத்தின் பிரதான நோக்கங்களாக அமைகிறது.

இச்சுவடிகள் கூடத் திணைக்களம் காலப்பகுதிக்கான டச்சு நிருவாகப் பதிவேடுகளையும், எஞ்சியவை 1796 - 1948 ஆண்டுகளுக்குரிய பிரித்தானியர் காலத்திற்கும் அத்தோடு 1948 முதல் அமைந்த சுதந்திர இலங்கைக்கும் உரியனவுமான தொகுதிகளையும் உள்ளடக்கியதாகும். அரசுப் பதிவேடுகள் தனியார் பதிவேடுகள் நுணுக்கொளிப்படங்கள் முதலியன பேணுகையில் உள்ளன.

இங்கு பேணுகையில் இருக்கும் செய்திப் பத்திரிகைகள் எவ்வாறு வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு உதவுகிறது என நோக்கும் போது, பத்திரிகைகள் சட்டம் (அத்தி 180) ன்படி 1830 லிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகள் சுவடிகள் கூடத்தில் பேணப்பட்டு வருகிறது. 19 ஆம் நூ/ஆ இடைக்காலப்பகுதியிலிருந்து ஸ்ரீலங்கா நவீனயுகத்தின் ஆரம்பமும் வளர்ச்சி பற்றி அறிவதற்கான மூலங்களாக இவை திகழ்கிறது.

குறிப்பாக தமிழில் 19 ஆம் நூ/ஆ இடைக்கால கட்டங்களில் தோன்றிய தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றான உதயதாரகை (Morning) Star ஐ எடுத்துக் கொண்டால் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த இப்பத்திரிகை ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் சமூகத்தில் நிலவிய சமூக பொருளாதார முரண்பாட்டு நிலைகளையும், அக்காலத்தில் சமூக, சமய, பொருளாதார அரசியல் நடை முறைகள் அப்பத்திரிகைகளில் விவரமாக அறியக் கூடியதாகவுள்ளது. இலங்கை வடதேசம், பிரதேசம் சமாசாரத்திரட்டு இவ்வாறான சில தலையங்கங்களின் கீழ் ஆரம்பகாலங்களில் வெளியான விடயங்கள் சாதாரண செய்தியாக மட்டுமன்றி வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

பத்திரிகைகளின் பகுதிகள் ஆராய்ச்சியாளர்களுக்கு தேவைப்படுமிடத்து பத்திரிகையின் பௌதிக நிலையை/ தேவையைப் பொறுத்து போட்டோ பிரதியாகவோ அல்லது நுணுக்கொளிப்படத்தின் மூலமோ வழங்கப்படுகிறது.

பதிப்பாளர் வெளியீட்டாளர் சட்டத்தின்படி வெளிவரும் வெளியீடுகள் தேசிய சுவடிகள் கூடத்தில் பேணப்பட்டு வருகிறது. இவை சட்டரீதியான வைப்புகளாக இருப்பதினால் இவை தேடுகைக்கு வழங்கப்படுவதில்லை. ஆயினும் ஒரு ஆராய்ச்சியாளருக்கு வேறெந்த நூலகத்திலும் குறிப்பிட்ட வெளியீடு கிடைக்காத